# <u>ஆற்காடு நகராட்சி</u>

<u>மன்றக் கூட்டப் பொருள்</u>

## 25.<u>02.2021-ம் தேதி பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற சாதாரணக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.</u>

**பொருள் எண்.01)** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜனவரி–2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்
ந.க.எண்.0665/2018/சி1
**தீர்மான எண்.39– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.02)** இந்நகராட்சி பொறியாளர் அவர்களின ஜனவரி–2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.
அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்
**தீர்மான எண்.40– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 03.** இந்நகராட்சியில் 2021–2022 முதல் 2023 – 2024 வரை மூன்று ஆண்டிற்கு 12.02.2021 ஆம் தேதியில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஏலம் கோரிய தொகைகள் மன்றத்தின் பார்வைக்கும் , ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| இனம் | விவரம் | ஒப்பந்தப்புள்ளி அளித்த தொகை | | | ஏலத்தில் கலந்து கொண்டு அளித்த தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வ. எண் | பெயா மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த தொகை ரூ. | வ.எண் | ஏலத்தில் கலந்துகொள்ள தொகை செலுத்தியவர்கள் | ஏலத்தில் கோரிய தொகை ரூ. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | தற்காலிக கடைகள் சுங்கம் | 1 | எம்.பாஸ்கரன், 13, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 3,22,820/– | *1* | எம்.பாஸ்கரன், 13, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 3,70,000/– |
| | | 2 | எம்.மீனாட்சி அம்மாள் 11, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 4,06,999 | *2* | எம்.மீனாட்சி அம்மாள் 11, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 3,66,000/. |
| | | 3 | எஸ்.சரவணன் 43சி, இராஜகோபால் தெரு, ஆற்காடு | 5,15,515/– | | | |
| 2 | பார உந்து சுங்கம் | 1 | எம்.பாஸ்கரன், 13, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 7,19,999/– | 1 | எம்.பாஸ்கரன், 13, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 4,89,000/– |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | எம்.மீனாட்சி அம்மாள் 11, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 4,10,799/– | 2 | எம்.மீனாட்சி அம்மாள் 11, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 4,90,000/– |
| | | 3 | எம்.சேட்டு 2/216எ, கன்னிகோயில் தெரு, தாஜ்புரா, ஆற்காடு | 6,30,000/– | – | – | – |
| | | 4 | எஸ்.சரவணன் 43சி, இராஜகோபால் தெரு, ஆற்காடு | 6,44,644/– | – | – | – |
| 3 | நகராட்சி பூங்காவில் தண்ணீர் எடுத்து விற்பனை செய்தல் | 1 | எம்.பாஸ்கரன், 13, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 4,34,999 | 1 | எம்.பாஸ்கரன், 13, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 3,80,000 |
| | | 2 | எம்.மீனாட்சி அம்மாள் 11, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 3,25,999 | 2 | எம்.மீனாட்சி அம்மாள் 11, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 3,79,000 |
| | | 3 | எம்.சேட்டு 2/216எ, கன்னிகோயில் தெரு, தாஜ்புரா, ஆற்காடு | 5,10,000/– | | | |
| 4 | பேருந்து நிலையம் திண்பண்டங்கள் விற்பனை | 1 | எம்.பாஸ்கரன், 13, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 4,00,999 | | எம்.பாஸ்கரன், 13, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 3,85,000 |
| | | | எம்.மீனாட்சி அம்மாள் 11, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 3,80,914 | | எம்.மீனாட்சி அம்மாள் 11, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 3,84,000 |
| 5 | பேருந்து நிலையம் பேருந்து சுங்கம் வசூல் | 1 | எம்.பாஸ்கரன், 13, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 8,02,999 | 1 | எம்.பாஸ்கரன், 13, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | ஏலம் கோர முன் வரவில்லை |
| | | 2 | எம்.மீனாட்சி அம்மாள் 11, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 7,00,000 | 2 | எம்.மீனாட்சி அம்மாள் 11, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | ஏலம் கோர முன் வரவில்லை |
| 6 | பேருந்து நிலையம் ஒலிபெருக்கி | 1 | எம்.சேட்டு 2/216எ, கன்னிகோயில் தெரு, தாஜ்புரா, ஆற்காடு | 2,35,000 | | ஏலத்திற்கு எவரும் வங்கிவரைவோலை செலுத்தப்பட வில்லை | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | எஸ்.பிரபாகரன்,<br>2/216எ,<br>கன்னிகோயில்<br>தெரு, தாஜ்புரா,<br>ஆற்காடு | 2,34,000 | | | |
| 7 | ஆடு, மாடு, கோழி<br>விற்பனை சுங்கம்<br>வசூல் | | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் வங்கிவரை வோலை செலுத்தப்படவில்லை | | | | |
| 8 | ஆடு, தொட்டி<br>சுங்கம் வசூல் | 1 | எம்.பாஸ்கரன்,<br>13, கானார் பஜனை<br>கோயில் தெரு,<br>ஆற்காடு | ஒப்பந்தப்புள்ளி<br>எவரும்<br>கொடுக்கப்பட<br>வில்லை | 1 | எம்.பாஸ்கரன்,<br>13, கானார் பஜனை<br>கோயில் தெரு,<br>ஆற்காடு | ஏலம் கோர முன்<br>வரவில்லை |
| | | 2 | எம்.மீனாட்சி<br>அம்மாள்<br>11, கானார் பஜனை<br>கோயில் தெரு,<br>ஆற்காடு | ஒப்பந்தப்புள்ளி<br>எவரும்<br>கொடுக்கப்பட<br>வில்லை | 2 | எம்.மீனாட்சி<br>அம்மாள்<br>11, கானார் பஜனை<br>கோயில் தெரு,<br>ஆற்காடு | ஏலம் கோர முன்<br>வரவில்லை |
| | | 3 | எம்.சேட்டு<br>2/216எ,<br>கன்னிகோயில்<br>தெரு, தாஜ்புரா,<br>ஆற்காடு | ஒப்பந்தப்புள்ளி<br>எவரும்<br>கொடுக்கப்பட<br>வில்லை | 3 | பி.ராஜா, 41பி,<br>ஏரிகீழ் தெரு,<br>ஆற்காடு | ஏலம் கோர முன்<br>வரவில்லை |
| 9 | பேருந்து நிலையம்<br>சைக்கிள்<br>நிறுத்துமிடம் | 1 | எம்.பாஸ்கரன்,<br>13, கானார் பஜனை<br>கோயில் தெரு,<br>ஆற்காடு | 1,76,999 | 1 | எம்.பாஸ்கரன்,<br>13, கானார் பஜனை<br>கோயில் தெரு,<br>ஆற்காடு | 1,74,000 |
| | | 2 | எம்.மீனாட்சி<br>அம்மாள்<br>11, கானார் பஜனை<br>கோயில் தெரு,<br>ஆற்காடு | 1,70,999 | 2 | எம்.மீனாட்சி<br>அம்மாள்<br>11, கானார் பஜனை<br>கோயில் தெரு,<br>ஆற்காடு | 1,75,000 |
| 10 | கட்டண<br>கழிப்பிடம்,<br>அண்ணாசாலை | 1 | சி.நேதாஜி<br>14/54, பாலசுந்தரம்<br>தெரு, ஆற்காடு | ஒப்பந்தப்புள்ளி<br>எவரும் கொடுக்கப்<br>படவில்லை | 1 | எஸ்.சரவணன்<br>43சி,<br>இராஜகோபால்<br>தெரு, ஆற்காடு | ஏலம் செலுத்தி<br>ஒருவர் மட்டுமே<br>பணம் செலுத்தி<br>வருகை<br>புரிந்துள்ளதால்<br>இவை மறு ஏலம்<br>கோர<br>அனுமதிக்கப்பட்டது |
| 11 | கட்டண<br>கழிப்பிடம்,<br>பேருந்து நிலையம் | 1 | எம்.பாஸ்கரன்,<br>13, கானார் பஜனை<br>கோயில் தெரு,<br>ஆற்காடு | 12,51,999 | 1 | எம்.பாஸ்கரன்,<br>13, கானார் பஜனை<br>கோயில் தெரு,<br>ஆற்காடு | 11,95,000 |
| | | 2 | எம்.மீனாட்சி<br>அம்மாள்<br>11, கானார் பஜனை<br>கோயில் தெரு,<br>ஆற்காடு | 11,90,700 | 2 | எம்.மீனாட்சி<br>அம்மாள்<br>11, கானார் பஜனை<br>கோயில் தெரு,<br>ஆற்காடு | 11,94,000 |

அ.கு. அ)1. இனம் எண்.1க்கு திரு.எஸ்.சரவணன் என்பவர் ரூ.515515/– என்ற உச்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.306495/–னை விட ரூ.209020/– அதிகமாக கொடுத்துள்ளார். இவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதி அளிக்கலாம்

2) இனம் எண்.2க்கு திரு.எம்.பாஸ்கரன் என்பவர் ரூ.719999/– என்ற உச்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.390285/–னைவிட ரூ.329714/– அதிகமாக கொடுத்துள்ளார். இவரின் ஒப்பந்தப்புள்யினை மன்றம் அனுமதி அளிக்கலம்.

3) இனம் எண்.3க்கு திரு.எம்.சேட்டு என்பவர் ரூ.510000/– என்ற உச்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.308700/– னைவிட ரூ.201300/– அதிகமாக கொடுத்துள்ளார். இவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

4) இனம் 4க்கு திரு.எம்.பாஸ்கரன் என்பவர் ரூ.400999/– என்ற உச்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.380914/– னைவிட ரூ.20085/– அதிகமாக கொடுத்துள்ளார். இவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

5) இனம் 5க்கு திரு.எம்.பாஸ்கரன் என்பவர் ரூ.802999/– என்ற உச்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.1003275/– னைவிட ரூ.200276/– குறைவாக கொடுத்துள்ளார். இவ்வினத்திற்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

6) இனம் 6க்கு திரு.எம்.சேட்டு என்பவர் ரூ.235000/– என்ற உச்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.231549/– னைவிட ரூ.3451/– அதிகமாக கொடுத்துள்ளார். இவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

7) இனம் 7க்கு எவரும் தொகை செலுத்தி கலந்து கொள்ளவில்லை மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு பொது ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம்.

8) இனம் எண்.8க்கு 6 நபர்கள் வங்கிவரைவோலைகள் கொடுத்துள்ளார். ஆனால் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை. எனவே, மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு பொது ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம்.

9) இனம் 9க்கு திரு.எம்.பாஸ்கரன் என்பவர் ரூ.176999/– என்ற உச்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.167578/– னைவிட ரூ.9421/– அதிகமாக கொடுத்துள்ளார். இவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

10) இனம் எண்.10க்கு 2 நபர்கள் தொகை செலுத்தி கலந்து கொண்டனர். ஆனால், ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்திற்கு தலா ஒருவர் வீதம் கலந்து கொண்டதால், விதிகளின்படி மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு பொது ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம்.

**11)** இனம் 11க்கு திரு.எம்.பாஸ்கரன் என்பவர் ரூ.1251999/— என்ற உச்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.1190700/— னைவிட ரூ.61299/— அதிகமாக கொடுத்துள்ளார். இவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட 11 இனங்களில், இனம் எண்.1, 2, 3, 4, 6, 9 மற்றும் 11க்கு கொடுத்துள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகைகளை மன்றம் ஏற்றும் குத்கையினை 01.04.2021 முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகையினை ஒப்படைக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ) 1.இனம் எண்.5, பேருந்து நிலைய சுங்கம் வசூல் இனத்திற்கு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியானது சென்ற ஆண்டைவிட குறைவாக உள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு பொது ஏலம் மன்றம் அனுமதிக்கலாம்.

2) இனம் எண்.7. ஆடு, மாடு கோழி சுங்கம் வசூல் இனத்திற்கு எவரும் தொகை செலுத்தி கலந்து கொள்ளாததால் இவ்வினத்தை மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு பொது ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம்.

3) இனம் 8, ஆடு அறுக்கும் தொட்டிக்கு 6 நபர்கள் தொகை செலுத்திய நிலையில், ஆடு ஒன்றுக்கு கட்டணம் ரூ.200/— என உள்ளதற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளதாலும், வருவாய் ஆய்வாளர் தனது 15.02.2021ம் தேதிய ஆய்வு குறிப்பில் ஆடு அறுக்க கட்டணம் ரூ.70/— என குறைத்து நிர்ணயம் செய்து மீளவும் இக்குத்தகை இனத்தினை மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு பொது ஏலம் கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4) இனம் எண்.10, கட்டண கழிப்பிடம், அண்ணாசாலை இனத்திற்கு ஏலத்திற்கு ஒருவரும், ஒப்பந்தப்புள்ளிக்கு ஒருவரும் என தொகை செலுத்தியதாலும், ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோர விதிகளில் இடமில்லை என்பதாலும், இவ்வினத்தை மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு பொது ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2014/2020/அ4)

**தீர்மான எண்.41— அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 04.** இந்நகராட்சியில் 2021—2022 முதல் 2023 – 2024ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டிற்கு 23.02.2021 ஆம் தேதியில் மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு பொது ஏலம் கோரப்பட்டதில், பெறப்பட்ட வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஏலத்தில் கோரிய உயர்ந்தபட்ச ஏலத் தொகையினை மன்றத்தின் பார்வைக்கும் , ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| இனம் | விவரம் | ஒப்பந்தப்புள்ளி அளித்த தொகை | | | ஏலத்தில் கலந்து கொண்டு அளித்த தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வ. எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | வ.எண் | ஏலத்தில் கலந்துகொள்ள தொகை செலுத்தியவர்கள் | ஏலம் கோரிய தொகை ரூ. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 5 | பேருந்து நிலையம் பேருந்து சுங்கம் வசூல் | 1 | எம்.பாஸ்கரன், 13, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவில்லை | 1 | எம்.பாஸ்கரன், 13, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 10,09,100/— |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | எம்.மீனாட்சி அம்மாள் 11, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவில்லை | 2 | எம்.மீனாட்சி அம்மாள் 11, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 10,09,000/. |
| 7 | ஆடு, மாடு கோழி விற்பனை சுங்கம் வசூல் | 1 | எவரும் தொகை செலுத்தவில்லை | | | எவரும் தொகை செலுத்தவில்லை | |
| 8 | ஆடு தொட்டி சுங்கம் வசூல் | 1 | எம்.பாஸ்கரன், 13, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 5,50,299/– | 1 | எம்.பாஸ்கரன், 13, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 10,59,000/– |
| | | 2 | எம்.மீனாட்சி அம்மாள் 11, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 9,40,299/– | 2 | எம்.மீனாட்சி அம்மாள் 11, கானார் பஜனை கோயில் தெரு, ஆற்காடு | 10,00,000 |
| | | 3 | எம்.சேட்டு 2/216எ, கன்னிகோயில் தெரு, தாஜ்புரா, ஆற்காடு | 9,56,000/– | 3 | எம்.சேட்டு 2/216எ, கன்னிகோயில் தெரு, தாஜ்புரா, ஆற்காடு | 9,00,000 |
| 10 | கட்டண கழிப்பிடம் அண்ணாசாலை | 1 | சி.நேதாஜி 14/54, பாலசுந்தரம் தெரு, ஆற்காடு | 1,01,000 | | எவரும் தொகை செலுத்தவில்லை | |
| | | 2 | எஸ்.சரவணன் 43சி, இராஜகோபால் தெரு, ஆற்காடு | 1,56,879 | | | |
| | | 3 | ஆர்.சந்திரசேகரன் 14/54, பாலசுந்தரம் தெரு, ஆற்காடு | 99,000/– | | | |

அ.கு. 1) இனம் எண்.5க்கு திரு.எம்.பாஸ்கரன் என்பவர் ரூ.10,09,100/– என்ற உச்ச ஏலகேள்வி கோரியுள்ளார் சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.10,03,275/–னைவிட ரூ.5825/– அதிகமாக கோரியுள்ளார். இவரின் ஏலகேள்வியினை மன்றம் அனுமதி அளிக்கலம்.

2) இனம் எண்.7க்கு 11.02.2021 மற்றும் 23.02.2021 ஆகிய இரண்டு தேதிகளில் ஏலம் கோரியும் ஒருவரும் வைப்புத்தொகை செலுத்தி கலந்து கொள்ளாததாலும், சென்ற ஆண்டுகளில் குறைவான தொகை ரூ.6836/– ஆண்டு குத்தகை தொகையாக இருப்பதாலும் இவ்வினத்தினை நகராட்சி குத்தகை இனங்களிலிருந்து நீக்கம் செயய மன்றம் அனுமதிக்கலாம்.

3) இனம் 8க்கு திரு.எம்.பாஸ்கரன் என்பவர் ரூ.10,59,000/– என்ற உச்ச ஏலக்கேள்வி கோரியுள்ளார். சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.6,31,733/–னைவிட ரூ.4,27,267/– அதிகமாக கோரியுள்ளார். இவரின் ஏலகேள்வியினை மன்றம் அனுமதி அளிக்கலம்.

4) இனம் 10க்கு திரு.எஸ். சரவணன் என்பவர் ரூ.1,56,879/– என்ற உச்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.88,310/–னைவிட ரூ.68,569/– அதிகமாக உள்ளது. இவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதி அளிக்கலம்.

5) இனம் 5க்கு பேருந்து நிலையத்தினை சுத்தம் செய்யும் சம்பளம் 2018–2021ம் ஆண்டின் ரூ.1,20,000/– என இருந்தது. ஆனால் 2021–2024ம் ஏல அறிவிப்பில் பணியாளர் சம்பளம் ரூ.2,40,000/– என நிர்ணயம் செய்யப்பட்டது. முந்தைய ஆண்டு இவரே குத்தகைதாரர் ஆவார். எனவே, இவர் தெரிவித்துள்ள ஆட்சேபனையினை ஏற்று முந்தைய ஆண்டு பணியாளர் சம்பளத்தை ரூ.1,20,000/– என நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2014/2020/அ4

**தீர்மான எண்.42– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 05.** இந்நகராட்சிக்கு சொந்தமான ஏ.ஜி.ஆர். கட்டிடம் கடை எண்.1 (வ.வி.எண்.025/1) கதர் கிராமத் தொழில்கள், வேலூர் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக நகராட்சிக்கு வாடகை அளித்து வந்தார்.

இந்நிலையில், உதவி இயக்குநர், கதர் கிராமத்தொழில்கள், வேலூர் அவர்கள் தனது கடிதம் ந.க.எண்.403/2017/கே நாள்.21.01.2021ல் கடையினை நகராட்சி வசம் திரும்ப ஒப்படைத்து வருவதாக கடிதம் அளித்துள்ளார். கடிதம் வருவாய் ஆய்வாளரால் பரிந்துரை செய்யப்பட்டு கடை நகராட்சி வசம் பெற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, மேற்படி கடையினை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அ.கு:– 1) கடை எண்.1, ஏ.ஜி.ஆர். கட்டிடம் கடையினை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுமக்கள் அறியும் வண்ணம் தினசரி நாளிதழ் விளம்பரம் செய்யலாம் இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.45/2021/அ4
**தீர்மான எண்.43– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 06.** இந்நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி.எஸ்.உமாராணி (எ) ராணி என்பவர் 27.07.2015 முதல் ஆற்காடு நகராட்சியில் பணிபுரிந்து வருகிறார் . மேற்படி நபரால் குடும்ப சூழ்நிலை காரணமாக வேலூர் மாநகராட்சிக்கு பணி மாறுதல் கோரப்பட்டுள்ளது. அதன்பேரில் அன்னாரின் விண்ணப்பத்தினை மன்றத்தின் ஒப்புதலுக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
ந.க.எண்.0131/2021/சி1
**தீர்மான எண்.44– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 07.** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை பணியாளர்களாக பணிப்புரியும் திரு. செல்வம் மற்றும் 12 பணியாளர்கள் சென்னை உயர் நீதி மன்ற மேல்முறையீட்டு வழக்கு எண். 123–126, 128,129, 212 –126,128,129, 121–218 of 2019 என்ற வழக்குகளுக்கு 10.01.2019ம் நாளில் தீர்ப்புரை பெறப்பட்டதில், மாண்பை உச்ச நீதி மன்றம் டில்லியில் இவ்வழக்கினை சிறப்பு விடுப்பு மேல் முறையீடு மனுவாக 22.01.2021.ஆம் நாளில் செல்வி. ஷாலினி

கவுல்என்ற உச்சநீதிமன்ற வழக்கறிஞர் மற்றும் திரு.பி.ஆனந்த் அரசு வழக்கறிஞர்கள் மூலம் மனுவை டில்லி மாண்பை மாண்பை உச்ச நீதி மன்றத்தில் வாதுரை மேற்கொள்ள தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒரு வாய்தா வழக்கறிஞர் ஆஜராகவதற்கான கட்டணம் ரூ.5,00,000/—ஐ என தெரிவிக்கப்பட்டதில் கடிதத்தில் கோரியுள்ளளதன்படி முதற்கட்டமாக வழக்கறிஞர் கட்டணம் ரூ.2,50,000/—ம் மற்றும் இதர வழக்கு செலவினத் தொகை ரூ.1,22,000/— ஆக மொத்தத் தொகை ரூ.3,72,000/—ஐ அரசு வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களுக்கு வழங்கவும் மேலும் பின்வரும் காலங்களில் இச்செலவினத்தை மேற்கொள்ள வேண்டி தோராய செலவினத் தொகை ரூ. 10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் தூய்மை பணியாளர்கள் திரு. செல்வம் மற்றும் 12 பணியாளர்களின் சென்னை உயர் நீதி மன்ற மேல்முறையீட்டு வழக்கை மாண்பை உச்ச நீதி மன்றம் டில்லியில் மேல்முறையீடு செய்யப்பட்டதற்கு வழக்கறிஞர் மற்றும் வழக்கு தொடர்பான செலவினத்தை மேற்கொள்ள மன்ற அனுமதியினை எதிர் நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் அளித்துள்ளமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) சிறப்பு விடுப்பு மேல்முறையீட்டு மனுவாக தாக்கல் செய்யப்பட்டதற்கான வழக்க செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 2845/2012/எச்1

**தீர்மான எண்.45— அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 08.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு அய்வாளர் அவர்களின் குறிப்பின்படி, கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கு கீழ் காணும் பட்டியலில் உள்ள தடுப்பு நடவடிக்கைக்காக கிருமிநாசினி பொருட்கள் தேவைப்படுவதால் இதனை அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் அதற்கான பட்டியல் தொகை பெற்று அத்தொகையினை நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விவரங்கள் | : | எணிக்கைகள் |
|---|---|---|---|
| 1. | சானிடைசர் | : | 150—லிட்டர் |
| 2. | ஆசிட் | : | 100—லிட்டர் |
| 3. | பெனாயில் | : | 100—லிட்டர் |
| 4. | லைசால் | : | 400—லிட்டர் |
| 5. | பிளீச்சீங் பவுடர் | : | 500—கிலோ |
| 6. | சுண்ணாம்பு | : | 2000—கிலோ |

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) பொது சுகாதாரப்பிரிவில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கு கிருமி நாசினி பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்ய வேண்டி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கான கிருமிநாசி பொருட்களை கொள்முதல் செய்ய வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 71/2021/எச்1

**தீர்மான எண்.46– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 09.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகாக கீழ் காணும் பட்டியலில் உள்ள கிருமிநாசினி பொருட்கள் தேவைப்படுவதால் இதனை அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்ய 01.02.2021ஆம் நாளில் மன்றத்தின் அனுமதி வைக்கப்பட்டு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் காணும் கூட்டுறவு நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதற்கு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மேலும், இதற்கான செலவினத் தொகை ரூ.1.60 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பொருட்களின் விவரம் | Units | The katpadi Agro Engineering & Service Co-op Centre Ltd, Katpadi, Vellore. Rs. | The Walajapet Agro Engineering & Servnce Co-Op Centre Limited, Walajapet. Rs. |
|---|---|---|---|---|
| 1. | சானிடைசர் | 1Ltrs | 365.00 | 350.00 |
| 2. | ஆசிட் | 1Ltrs | 37.00 | 35.00 |
| 3. | பெனாயில் | 1Ltrs | 37.00 | 35.00 |
| 4. | லைசால் (5%) | 1Ltrs | 148.00 | 140.00 |
| 5. | பிளீச்சீங் பவுடர் | 1Kg | 46.00 | 43.00 |
| 6. | சுண்ணாம்பு | 1Kg | 8.00 | 7.00 |

அ.கு. 1)மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) பொது சுகாதாரப்பிரிவில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கு கிருமி நாசினி பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட வாலாஜா அக்ரோ இஞ்சினியரிங் அண்டு சர்வீஸ் கோ.ஆப் சென்டர் லிமிட் வாலாஜா நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்கப்பட்டு, மேற்படி கிருமிநாசினி பொருட்களை கொள்முதல் செய்ய மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கான கிருமிநாசி பொருட்களை கொள்முதல் செய்ய வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 71/2021/எச்1

**தீர்மான எண்.47– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 10.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் Tata Hitachi Front end Loader வாகனம் TN73AV 4824 பழுதடைந்துள்ளதால் இதனை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டி அதன் தொடர்புடைய Chennai SSSS Equipments Pvt Ltd, சென்னை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பழுதுக்களை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ள இதற்கான தோராயச் செலவினத் தொகை ரூ.50,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) Tata Hitachi Front end Loader வாகனம் TN73AV 4824ல் ஏற்பட்டுள்ள பழுதுக்களை உடனடியாக அதன் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் நிவர்த்தி செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றப்பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் ஒப்புதல் அளித்தமைக்கும் நிர்வாக நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) வாகனத்தின் பழுதுக்களை நிவர்த்தி செய்ய வேண்டி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.171/2021/எச்1

**தீர்மான எண்.48— அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 11.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் குப்பைகளை எடுத்து நுண்ணுரயிர் உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லும் வாகன எண். TN73AC 6529 இலகுரக வாகனம் திடீர் பழுது ஏற்பட்டுள்ளதால் இதனை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டி அங்கீகரிக்கப்பட்ட LAWRENCE AUTOMOTIVE PVT LTD, VELLORE நிறுவனத்தில் பழுதுக்களை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதினால் இதற்கான செலவினத் தொகை ரூ.3962/—ஐ துப்புரவுஆய்வாளர் அவர்கள் மூலம் மேற்கொண்டதால் இத்தொகையினை திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) TN73AC 6529 இலகுரக வாகனம் திடீர் பழுது ஏற்பட்டுள்ளதால் இதனை உடனடியாக அதன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் துப்புரவு ஆய்வாளர் அவர்களால் நிவர்த்தி செய்யப்பட்டமைக்கு செலவினத் தொகையினை திருப்பி வழங்க மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கல் ஒப்புதல் அளித்தமைக்கும் அனுமதி வழங்கலாம்.

3) செலவிடப்பட்ட வாகனச் செலவினத் தொகையினை திருப்பி வழங்க வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.171/2021/எச்1

**தீர்மான எண்.49— அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 12.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் பொது சுகாதாரப் பணிக்கு கீழ் காணும் பட்டியலில் உள்ள தளவாடப் பொருட்கள் தேவைப்படுவதால் இதனை அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் இதற்கான செலவினத் தொகையினை குறைந்த விலைப்புள்ளியின் மொத்த தொகையிக்கு நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | தளவாடப் பொருட்களின் பெயர்கள் | : | எண்ணிக்கைகள் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | மண்வெட்டி | : | 30 |
| 2. | குப்பை அகற்றும் கொக்கி | : | 50 |
| 3. | குப்பைகளை பிரிக்கும் கொக்கி | : | 50 |
| 4. | குப்பை வாரும் தகடு | : | 200 |
| 5. | அன்னக்கூடை | : | 100 |
| 6. | கடப்பாறை | : | 3 |
| 7. | தெரு கூட்டும் துடப்பம் | : | 100 |
| 8. | தென்னை துடப்பம் | : | 150 |
| 9. | சாலையில்மண் அகற்றும் பிரஷ் | : | 20 |
| 10. | அறிவாள் | : | 20 |
| 11. | இரும்பு வாளி | : | 10 |
| 12. | பிளாஸ்டிக் தட்டு | : | 30 |

அ.கு:– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் செயலாக்கப்பணிக்கு தேவையான தளவாடப் பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்ய வேண்டி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) தளவாடப் பொருட்களை கொள்முதல் செய்ய வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 71/2021/எச்1

**தீர்மான எண்.50– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 13.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பொது சுகாதாரப் பணிகளுக்கு தேவையான தளவாடப் பொருட்கள் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் கொள்முதல் செய்ய 12.02.2021ஆம் நாளின் மன்றப்பொருளில் அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் கூட்டுறவு நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் பெறப்பட்டமைக்கு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மேலும், இதற்கான செலவினத் தொகை ரூ.2.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | தளவாடப் பொருட்களின் பெயர்கள் | : | The Walajapet Agro Engineering & Service Co-op Centre Ltd, | The Katpadi Agro Engineering & Service Co-op Centre Ltd, |
|---|---|---|---|---|
| 1. | மண்வெட்டி | : | 270.00 | 280.00 |
| 2. | குப்பை அகற்றும் கொக்கி | : | 465.00 | 480.00 |
| 3. | குப்பைகளை பிரிக்கும் கொக்கி | : | 450.00 | 510.00 |
| 4. | குப்பை வாரும் தகடு | : | 160.00 | 175.00 |
| 5. | அன்னக்கூடை | : | 390.00 | 410.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | கடப்பாறை | : | 920.00 | 970.00 |
| 7. | தெரு கூட்டும் துடப்பம் | : | 362.00 | 410.00 |
| 8. | தென்னை துடப்பம் | : | 42.00 | 44.00 |
| 9. | சாலையில்மண் அகற்றும் பிரஷ் | : | 700.00 | 720.00 |
| 10. | அறிவாள் | : | 900.00 | 910.00 |
| 11. | இரும்பு வாளி | : | 540.00 | 550.00 |
| 12. | பிளாஸ்டிக் தட்டு | : | 240.00 | 245.00 |

அ.கு :– 1)மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பொது சுகாதாரப் பணிகளுக்கு தேதவயான தளவாடப் பொருட்களை கொள்முதல் செய்ய அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் The Walajapet Agro Engineering & Service Co-op Centre Ltd, என்ற கூட்டுறவு நிறுவனம் விலைப்புள்ளிகள் குறைவாக அளித்துள்ளமையால் இதனை ஏற்று மேற்படி நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்க மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் அளித்துள்ளமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) பொதுசுகாதார தளவாடப் பொட்களை கொள்முதல் செய்வதற்கான செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 71/2021/எச்1

**தீர்மான எண்.51– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 14.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் உள்ள மூன்று நுண்ணுயிர் மையங்களில் உருவாகும் நுண் உரத்தை அதற்குண்டான ஆய்வுக்கூடத்தில் பரிசேதனைகள் செய்யுமாறு 10.12.2020ஆம் நாளில் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் காணொலி கண்காட்சியில் அறிவுரைகள் வழங்கப்பட்டது. எனவே, ஜெயம் நகர் மற்றும் அசோக் நகர் நுண்ணுயிர் மையங்களில் உருவாகப்பட்ட எருவினை கோவையில் உள்ள Enviro Farmers Labs & Technologies, Coimbator ஆய்வகத்தில் பரிசோதனைகள் செய்யப்பட்டது. இதற்கான ஆய்வக முடிவுகள் பெறப்பட்டுள்ளமைக்கு, இதற்குண்டான செலவினத் தொகை ரூ.5900/–ஐ வழங்குமாறு கோரியுள்ளது. எனவே, தொகை ரூ.6000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் அறிவுரைகளின்படி, கோயம்புத்தூர் ஆய்வாக கூடத்தில் பரிசேதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான செலவினத் தொகையினை மேற்படி ஆய்வகத்திற்கு வழங்க மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3)எருவினை ஆய்வகத்தில் பரிசோதனைகள் மேற்கொண்டமைக்கான செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 2495/2020/எச்1

**தீர்மான எண்.52– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 15.** ஆற்காடு நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள TN73E 0155 என்ற ஈப்பு வாகனம் பழுது அடைந்துள்ளதால், இதனை உடனடியாக நீவர்த்தி செய்ய வேண்டி மகேந்திரா ஜீப் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான வேலூர் ஜெயின் கார்ஸ் –ல் பழுதினை நீவர்த்தி செய்ய தோராய செலவினத் தொகை ரூ.65000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு :– 1)மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2)TN73E 0155 என்ற ஈப்பு வாகனம் பழுதினை மகேந்திரா ஜீப் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான வேலூர் ஜெயின் கார்ஸ் –ல் நீவர்த்தி செய்ய வேலைக்கான உத்திரவு வழங்க தனி அலுவலர் மற்றம் ஆணையாளர் அவர்கள் ஒப்புதல் பெற்றமைக்கும் மற்றும் இதற்கான செலவினப்பட்டியல் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.360/2021/எச்1

**தீர்மான எண்.53– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 16.** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு பயன்பாட்டில் உள்ள TN73E 0138 என்ற ஈப்பு வாகனத்தில் மின்கலன் பழுது ஏற்பட்டுள்ளதால், இதனை உள்ளூர் மின்கலன் விநியோகஸ்தர்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள தேராயா செலவினத் தொகை ரூ. 10000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) 0138 என்ற ஈப்பு வாகனத்தில் மின்கலன் பழுது ஏற்பட்டுள்ளதால் இதனை உடனடியாக நிவர்த்தி செய்ய உள்ளூர் மின்கலன் விநியோகஸ்தர்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றபொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) மேற்படி செலவினத்தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 291/2021/எச்1

**தீர்மான எண்.54– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 17.** இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள TN 73E 0138 என்ற ஈப்பு வாகனத்தின் மின்கலன் பழுது ஏற்பட்டுள்ளதால் இதனை புதிய மின்கலன் வாங்க மன்றப்பொருளில் 24.02.2021ஆம் நாளில் தோரய செலவினத் தொகை ரூ.10000/–க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே கீழ் காணும் உள்ளூர் மின்கலன் விநியோகஸ்தர்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டதற்கு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் | ரூ. |
|---|---|---|
| 1. | Ganesh Battery Cenre & Auto Spares, Ranipet | 7500.00 |
| 2. | Sri Rajeswari Agencies, Ranipet | 8000.00 |
| 3. | Ganesh Battery Cenre & Auto Spares, Arni | 8250.00 |

அ.கு:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வ.எண்.1–இல் காணும் Ganesh Battery Cenre & Auto Spares, Ranipet என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் புதிய மின்கலன் வாங்க விநியோக உத்தரவிட அனுமதி அளித்தமைக்கும், மேலும் இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.291/2021/எச்1

**தீர்மான எண்.55– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 18** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் மக்கும்/மக்கா குப்பைகளை மூன்று நுண்ணுர மையங்களில் பிரித்து மக்கும் குப்பைகளை உரம் தயாரிக்கும் பணியில் 18 ஆண்கள் சுய உதவிக்குழு பணியாளர்களை கொண்டு ஈடுபட்டு வருவதில் 31.03.2021ஆம் நாளில் நிர்வாக அனுமதி முடிவடைவதால், இதனை மேலும் ஐந்து மாதங்களுக்கு 01.04.2021 முதல் 31.05.2021 வரையிலான நாட்களுக்கு 2019–2020 வருடத்திய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறையில் தெரிவித்துள்ள வ.எண்.1 Unskilled Labour-320/-ஐ நிர்ணயம் செய்து தினக்கூலியாக வழங்க தோராயச்செலவினத் தொகை ரூ.3.48 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இந்நகராட்சியில் உள்ள மூன்று நுண்ணுயிர் மையங்களில் செயலாக்கப் பணிக்கு 18 ஆண்கள் சுய உதவிக்குழு பணியாளர்களை கொண்டு மேலும் ஐந்து மாதங்களுக்கு பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

4) நுண்ணுயிர் மைய 18 பணியாளர்களுக்கு மாத ஊதியத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 589/2020/எச்1

**தீர்மான எண்.56– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 19** மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராணிப்பேட்டை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ4/392/2020 நாள். 05.02.2021ன் படி ஆற்காடு நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020–21ன் கீழ் ரூ.1,74,450/– ஒதுக்கீட்டில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கம் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு எண் 23ல் மாசிலாமணி தெருவில் சிறுபாலம் அமைத்தல் பணி | 1,50,000 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு Desktop system கணினி சப்ளை செய்தல் பணி. | 24,450 |

அ.கு : 1) மன்றம் பதிவு செய்யலாம்.

2. இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.57– அனுமதிக்கப்பட்டது**

**ஆற்காடு** **தனி அலுவலர்,**
**நாள்: 25 .02.2021** **ஆற்காடு நகராட்சி**